கூட்டமான அணுவினையன்றி யின்றாம், பலவின் கூட்டமிது போலுமென்க. இவ்வண்ணமே ஒவ்வொருபொருளையும் ஆராயுமிடத்து அபாவமாகவே முடியும். உலகு இவ்வகைப்பட்ட ஆராய்ச்சியில் அபாவமாம். ஒன்றன்கூட்டம் பலவின்கூட்டமென்பவை காரணமாம். அணுவை முன்பே பூர்வபக்ஷம் செய்தமையாலாண்டு கண்டுகொள்க.

"உலகம் காரியப்படுவதைக் கண்டாரும் கேட்டாரும் இல்லையாகலின் எப்போதும் நித்தியமென்றுரைப்பாம்" எனின் உலகம் எப்போதும் சத்தாய் நித்தியமா? அசத்தாய் நித்தியமா? சத்தாய் நித்தியமேல் இதுவரையிலு முரைத்த நியாயங்களால் சத்தென்றுரைப்பது பொருந்தாது; அசத்தாய் நித்தியமேல இல்லாதது நித்தியமென்று கூறுதலினால் யாதுபயன்? இல்லாத முயற்கொம்பினையும் நித்தியமென்றுரைப்பதனோடு ஒக்குமல்லவா? உலகு எக்காலத்தும் அசத்துஅல்லது சத்துப்போலியாகலின் அதனைக் காரியமென்றேனும் காரணமென்றேனும் கூறுதல் எவ்வாற்றானும் பொருந்தாதென்றுணர்க.)

இதுமட்டும் கூறிவந்ததில் உலகம் அசத்தாயினும் பிரத்தியக்ஷமாகச் சுகதுக்கங்களை அநுபவிக்கின்றோமே; எப்படி உலகத்தை அசத்தென்றுரைப்பது? இது வையடியையடியாயிருக்கின்றதன்றிச் சந்தேகமொழியல்லவே யெனின் சொப்பனமுற்றும் பொய்யல்லவா? அச்சொப்பனத்தில் பிரத்தியட்சமாக அநுபவிக்கும் இன்பதுன்பங்களும் அவ்வுலகமும் பொய்யாய்ப் போகவில்லையா? அங்ஙனமேயிவ்வுலகையும் அதனின்ப துன்பங்களையும் ஏன் பொய்யென்றியம்பப்படாது?

ஒருபொருளை யறியவேண்டின் அப்பொருளுக்கு வேறாய் நின்றே யறியவேண்டும். வீட்டை அறியவேண்டின் வீட்டிற்குவேறாய்நின்றே அறிகின்றோம்; கடபடங்களை யறியவேண்டுமானால் அவற்றையும் வேறாய்நின்றே அறிகின்றோம். இவ்வாறே எல்லாப்பொருள்களையும் அறிகின்றோம். அங்ஙனமே இவ்வுலகை யறியவேண்டின் வேறாய்நின்றே யறியவேண்டும். அங்ஙனம் கண்டுரைத்தார் யாருமிலர். காண்டவர், சமஷ்டியான உலக அமிசமான வியஷ்டி சரீரத்தைக் கொண்டு அறிகின்றமையால், அது வேறுபட்டு அறிந்ததாக யாங்ஙனம் உரைக்கலாம்? அசத்தியமான சொப்பன சரீரத்தின்கண் அவ்வசத்திய சகத்தின் அமிசமான அசத்திய சரீரத்தைக்கொண்டு அச்சகத்தை அவ்விடத்தில் காணும்வரையில் அது சத்தியமாகவே தோன்றினும், அச்சகத்தையும் அச்சகத்தின் அமிசமான சரீரத்தையும் விட்டு வேறாயிருக்கும் இப்போது, அது பொய்யாய்ப் போகவில்லையா? சொப்பனாவஸ்தையில் சொப்பனசகம் சத்தியமாகக் காணப்படினும் சத்தியமாக அறியினும், அக்காலத்தும் அச்சொப்பனசகம் எப்படி பொய்யோ, அப்படியே இச்சகமும் இச்சக அமிசமான சரீரமும் பொய்யென்றுஏன் கூறப்படாது? ஐயமின்றிக்கூறலாம். இதனானே ஒருபொருளை அறியவேண்டின் அறிபவன் வேறாய்நின்றே அறியவேண்டுமெனவும், அவ்வாறின்றி அதனோடிருந்து அறிதல் பொய்யு மெய்யாய்த் தோற்றுமெனவும் கூறியவாறென்பது.

ஒருபொருள் உள்ளதா? இல்லதாவென ஆராயவேண்டின், அப்பொருளின் ஓர்பால்பிறிதோர் பாலொடுபொருந்துதலினாலேயேஉள்ளதெனக்கொள்வது எவ்வாற்றானு மமையாது. அப்படிச்சொல்வதினால் கானநீரின் அலை பிறிதொரு அலையுடனே சம்பந்தப்படுவது கொண்டே, அக்கானல்நீரையும் உண்டென்றுகொள்ளவேண்டிவரும். இங்ஙனமே உலகின் ஓர் பகுதி பிறிதொருபகுதியினோடு பொருந்துதலினானே உலகைச்சத்தென்றுரைத்தல் அடாது.

பொன் பூஷணமாய்த் திரிந்தபோதும் திரியாதபோதும் ஒரு தன்மையாயிருக்கக்கண்டோமென்றும், அவ்வாறு அறிவும் அறிபடுபொருளும் ஒருதன்மையாயிருக்கவில்லையென்றும் பிரதிவாதியார் உரைக்கின்றார். பொன்னாகிய காரணத்தில் பூஷணமாகிய காரியம் தோற்றமேயன்றித் திரிபல்ல; திரிபு போல் தோற்றுகின்றது. அவ்வாறே பரவஸ்துவின்கண் சேதநா சேதனமானவுலகம் தோற்றுகின்றது. பரவஸ்துதிரியவுமில்லை; காரியப்படவுமில்லை. இதுநிற்க;

(இன்னும்வரும பின்)

ஓர் நண்பர்

Bible Dissector (English)	0	0	6
One Hundred anb Fifty Contradictions of the Bible (English)	0	1	0

ப்ரம்மவித்தியா யந்திரசாலையில்
விற்கப்படும் தமிழ்புத்தக

விளம்பரம்

கிறிஸ்தவர் விடைகளின் மறுப்பு.
இஃது ஓர் சமஸ்கிருத பண்டிதரால் எழுதப்பட்டது.
விலை அணு 2.

நீக்கீர்த்தனை	,,	௧	௬
ஆன்மாவும் சரீரமும் (இஃது நாஸதிகர் கேழ்விக்கு விடை)	,,	௧	,,
சன்மார்க்கபோதனி	,,	,,	௩
சீகாழித்தலபுராணம்	,,	௮	,,
வேளூர்புராணம்	,,	௬	,,
சந்தபுராணநவநீதம்	,,	௪௨	,,
பஞ்சதசோபநிஷத்து	௧	௨	,,
அஷ்டாங்கயோகம்	,,	௫	,,
மனுமுறைகண்டவாசகம்	,,	௪	,,
கிறிஸ்துமதகண்டனம்	,,	௧	,,
சிவனுந்தேவனளென்னுந்திரா நாவச்காப்பு	,,	,,	,,
யேசுக்கிறிஸ்து மனிதனே	,,	,,	௬

விவேகசுந்தரம்.
நெ. ௧-௨-௩-௪-௫-௬ ௭-௮
பிரதி ஒவ்வொன்றுக்கு விலை பை மூன்று

CHIDAMBARAM:—Printed and Published for the Proprietor at the Brahmavida Press

𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌵𑌿𑌦𑍍𑌯𑌾.

{ ௩. புத்தகம் }

பத்திர கிரயம்
1வருஷம் 2—12—0
6மீ 1—8—0
3மீ 0—14—0
1காபி - 0—2—6
இலங்கைக்கு, 3—8—0.

{ VOL 3 }

ப்ரம்மவித்தியாபத்திரிகை.

மாதம்
இருமுறை
பிரசுரஞ் செய்யப்படும்

{ இலக்கம்-௭ }

பத்திரகிரயத்தை மணியார்டராகவாவது ரூ.1-க்கு அணு 1. சேர்த்து தபால் லேபிலகவாவது சிதம்பரம் ப்ரம்மவித்தியாப்ரெஸ்மானேஜருக்கு அனுப்புதல்வேண்டும்.

{ NO.7 }

ஸத்யாந்நாஸ்தி பரோ தர்ம: | ஸர்வதர்மாந் பரித்யஜ்ய ஸத்யம் ஏகம் ஸமாசர |

சிதம்பரம்:— ௧௮௮௮ஷு செப்டெம்பர்மீ ௩௰உ சர்வதாரிஷு புரட்டாசிமீ ௧௬௨

𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌵𑌿𑌦𑍍𑌯𑌾.

சிதம்பரம் — ஸர்வதாரிஸம்வத்ஸர: கந்யாமாஸ: ௧௪

ஜ்ஞாநம்

[அநுபந்த:]

[illegible]

ப்ரம்மவித்தியா.

சிதம்பரம்:— 1888ஷு செப்டெம்பர்மீ 30உ

மறுபிறப்பு.

(முன்தொடர்பு)

ஐயா, இஃது நாத்திகர் கேழ்விகளுள் இறுதியிலுள்ளது. "இச்சரீரத்தின் முன்னுகிலும் பின்னுகிலும இறப்பதற்குப் பிரமாணம் யாது" என்பது. இது முற்கூறியுள்ள காரணங்களான் மறுக்கப்பட்டதாயினும் மீண்டும் ஒருவாறு சுரிக்குரைப்பாம். ஜீவன் என்னும்வஸ்து அணுவாயுள்ளது என்று முன்னேகூறியுள்ளோம்; அணுவாயுள்ள வஸ்து அணுவாயும் அழிவற்றதாயும் இருத்தல் அவசியம். அவ்வான்மப்பொருள் நித்தம் சரீரத்தை அவாவுந்தன்மையுளது. ஆகையால் முத்தியில ஒன்றைத்தவிர்த்து மற்றெக்காலத்தும் அவ்வான்மா சரீரத்தை விட்டிராது. மேலும் முன்னனுபவ முண்டென்றும், மரணகாலவாசனை மறுபிறப்பைக் காட்டுமென்றும் இன்னுமனேக யுக்திகளை முன்னரெடுத்தோதினோம் என்றறிந்கொழிக. இனி ஜீவன் வாசனையற்றிருந்து முத்தி பெறுவானேல், அவனுக்கு இபற்றையாய் அனாதிதொடங்கி எற்பட்டுவந்த வாசனை முத்திகாலத்தில்மட்டில் எவ்விதம் ஒழியும்? எனில் கூறுவாம்: இங்கு அறியவேண்டிய உண்மையிது: ஒரு ஜீவன் முத்திபெறவேண்டுமேல் தனது இபற்றைவாசனைமாற ஓர் அப்பிராகிருத (அதாவது யாம் காணும் வஸ்துக்களினும் வேறான இலக்கணம் பெற்றது) திவ்வியவடிவைப்பெற்றவனாய் பரமேசுவரனைத் தியானிப்பான். அவனேஉத்தமாதிகாரியாயின் அவனது திருவருளைத் தனியே ஓர்

[illegible]

வடிவமும் அற்றதாய்த் தியானிப்பான்; அங்கு வேறு சரீரத்தை உண்டாக்கும் வாசனை முற்றிலும் ஒழியும்; ஆதலால் ஜீவன் அப்பரம்பொருளிடம் கலப்பான்; இதுவே ஆரியமத சித்தாந்த நிலையாய்ப் பொருந்தியது என்பதாதியெல்லாம் நன்று.

இவ்வளவு எழுதியபடியால் நாத்திகர்கள் கொண்ட கொள்கைகள் மறுக்கப்பட்டன வென்றறிக. இனி அவர்கள் துர்வாதத்தில் மறுக்கவேண்டிய விஷயம் சிறிதும் இல்லை. இனி கிறிஸ்தவர்கள்வாதம் இவ்விஷயத்தில் அனேகம் உண்டு. இவர்களுக்கு யுக்திபலம் சிறிதுமில்லை. இவர்களை நாம் விவாதசமயத்தில் லட்சியம் செய்யவேண்டியதேயில்லை. அவர்கள் ஒன்றையும் விசாரிப்பதேயில்லை. ஏதோ எழுதிய சில வார்த்தைகளை நம்புகிறார்கள். இக்காலக் கொடுமையால் சிறிதும் நமது மதம் அறியாது நிற்கும் குழந்தைகளின் மனதைக் கெடுக்கத்துணிந்து அவர்கள் மனதை மயக்க, அம் மதத்திலும் உண்மையுண்டென்றும அதுவும் ஓர் மதமென்றும் எண்ணுகிறார்கள். ஆதலால் அவர்களை நோக்கிச் சிறிது வரையவேண்டியதுண்டு; அவர்கள் கொண்ட வாதங்கள் இவை; அவர்கள் கூறும் வாதங்கள் “தேவனது சுபாவத்தாற்றான் யாதொரு காரணமின்றி உலகம் பலவிதமாகச் சிருஷ்டிக்கப்படுகிறது” என்றும் “உலகத்தில் ஜீவன்களை சிருஷ்டித்து, அவர்களை நாசமற்றவர்களாயும் நித்தர்களாயும் அவரே செய்தார்” என்றும், “அவனுக்கு ஒரே ஜனமமன்றி மறுபடியில்லை” என்றும் “இனி வில்லிடத்திற்கூறிய ஏசுவை நம்புகிறவன் நற்கதியடையான்,, என்பதுமே. இவைகளை முறையே விரித்து மறுப்பாம். இதில் முதற் கேழ்வியின் கருத்திது: “உலகத்தில யுக்தியென்பது நிலைபற்றதாதலால் இவ்வித விசித்திர உலகத்திற்கு வேறுவிதகாரணம அவர் கண்ட புத்தகத்தில் கண்டாமில்லை. ஆதலால ஈசுவரன் தானே சிருஷ்டிக்கிறான், தானே பலவிதப்படுத்துகிறான்,, என்பதே. ஐயா பாருங்கள்! எங்கும் உலகத்தில் யுக்தி அளவைக்கடங்கதென்றுவது எந்தவிஷயத்திலும் யுக்தி ஒப்பத்தக்கதல்ல வென்றுவது பகுத்தறிவுள்ளவன் ஒப்புவானா? யுக்தி ஒன்றை அநுமானிப்பதற்கு ஏதுவாயிற்றே. உலகத்தில் பல நூல்களை கற்ற பெரியோர்கள் ஒப்புமபடி ஒருவர் ஒரு யுக்தியால் ஒன்றைஸ்தாபித்தால் அதை அறிஞர் எவ்விதம் மறுப்பர். இனி நூலாராய்ச்சிக்கிச்சிறிதும் ஒவ்வாததும, யுக்திக்குப் புறம்பாயதும், தம்மவருட்பலரோ ஒப்பாததும், விரோதங்கள் நிரம்பியதுமான ஓர்புத்தகமட்டிலா இவ்விஷயத்தில் பிரமாண மாகும்? இனி அவர் சொல்வது சத்தியமாயும் உலகசிருஷ்டி காரணமின்றி உளதேல, ஒருவனை நொண்டியாயும், ஒருவனை குருடனாயும், மற்றவனை அழகுள்ளவனாயும், இன்னொருவனை அறிஞனாயும் சிருஷ்டிக்கிறார் என்றுசொல்லி, ஈசுவரனையும் குற்றமுள்ளவனாக்குகிறார்கள். அந்தோ!! இவர்க்கு நூலாராய்ச்சியின்மையே காரணமின்றி வேறு யாதுகாரணமுரைப்பாம்; இது அவர்களுக்குள் ஓர் புதிய சித்தாந்தமல்ல. அவர்கள் மதத்திற்குப் பரமாசாரியரான ஏசு என்பவன், முதலில் இதுவிஷயத்தில் உண்மையறியாதவனே. எங்ஙனமெனில், அவனே ஓர் சமயம் ஒரு குருடனைக்கண்டு, தன் சிஷ்யர்களை நோக்கி ஏன் குருடனானன்? இவன் செய்த பாவமா? அல்லது இவன் தகப்பன் செய்தபாவமா? என்றுவினவ, ஒருவிதமும் விடையளியாது “கடவுள் மகிமை விளங்க இவ்விதமாயிற்று,, என்று முடித்தார்

[illegible]

கள். ஐயா பாருங்கள்! கேழ்வி ஒன்று மறுமொழி ஒன்று. இது ஒன்றிலேயே அக்குருவின் மகிமையும் அச்சீடர் பெருமையும் விளங்கியதல்லவா? ஆதலால் இவ்விதம் உலகத்தில் உண்டாகும் விசித்திர சிருஷ்டி காரணமில்லாமல் கடவுளால் உண்டாமென்றால், அது தேவ தூஷணமாகும்; ஆதலால், பொருந்தாதென்க. இனி இரண்டாவது விஷயத்தை யாராய்வாம். “ஜீவன்கள் தேவனால் சிருஷ்டிக்கப்பட்டார்கள்; நித்தியனாக்கப்பட்டார்கள்,, என்பது இரண்டாவது. இதனால் அவர் எண்ணுவது இது: ‘ஈசுவரன் தனது மனம்போனபடி சிருஷ்டித்தருளவும, அவைகளைக் காக்கவும், அவைகளை சமயத்துக்கேற்ப அழிக்கவல்லமைபெற்றானதலாலும அவ்விதம் ஜீவர்களை நீடூழி நிலைபெறச்செய்வது, அவர் இச்சையால் அமையும் என்பதிற் சிறிதும்தடையில்லை. இனி ஒருக்கால் பிறந்தவர் நசிப்பாரானால் கடவுளை வழிபடுதல் பயனற்றதாகும். எனில் இவ் வான்மாக்கள் எக்காலத்திலேனும் ஒருககால அழியுமானால் இவர்கள் கடவுளை வழிபட்டு எச்சுகம் பெறுவார்கள்? இவர் உலகததில உடலுடன்தோன்றுங் காற்றால் உண்டாகிறார் என்பதுபோல், உலகத்துள்ள உடலைவிட்டகன்றால நசிப்பார என்றும் சொல்லநேரிடும். அங்ஙனமாயின், கடவுள் வழிபாட்டைப் பயனற்றதெனவே சொல்லநேரிடும். அப்பொழுது அஃது நாத்திகமாகும்; ஆதலால ஆன்மாக்களை கடவுள் சிருஷ்டித்தாரே ஒழிய அழிக்கமாட்டார். அவரவர் நன்மை தீமைகளுக்கேற்ப மோட்சநரகங்களில் வீழ்த்துவார்,, என்பது. இவ்விஷயத்தில் சொல்லவேண்டியதுணடு; உலகெங்கும் பொருளாராய்ச்சியுள்ளவன், ‘ஒன்று உண்டாகும் உண்டானது மறுபடி அழியாது,, என்று சொல்லத்துணிவான். அங்ஙனமே ஆன்மாக்கள் ஓர்சமயம் உண்டாகி ஒருசமயம் அழியுமேல் கடவுளை வழிபடல் பயனற்றதாம் என்பார். அதற்கு ஆன்மாக்கள் அனாதியேயென்று கூறுவது உசிதமேயன்றி தமது புத்திபோனபடியெல்லாம் யுக்தி அனுபவங்களுக்கு முற்றிலும் மாறாக ஓர் சித்தாந்தஞ் செயல் அழகன்று. அணுவாய ஆன்மா ஒருக்கால் ஒருவனால் சிருஷ்டிக்கப்பட்டதென்பது எவ்வறிஞர்க்கு நகைப்பை விளைவிக்காதொழியும்? அணுவாயுள்ளவத்து உண்டாதற்குத் தகுந்த காரணம் உண்டோ? இதுநிற்க; ஆன்மாக்களும் அநாதிகளாயின், கடவுளுக்கும் இவர்களுக்கும் வேற்றுமை யாது? அவ் விஷயத்தைக்கடவுளைப்பற்றி எழுதுமிடத்து எடுத்துக்காட்டுவாம். இவ்விஷயங்கள் போலிநம்பிக்கையைக் கொண்டவர் வாதாடும் அற்பவாதங்கள். அறிந்தோர்செவிக் கெட்டாததால் அவைகளைப்பற்றி யாம் சிறிதும் கவலைப்பட வேண்டுவதில்லை. மேலும் அவர்கள் கைக்கொண்ட விவிலிய புத்தகம் முற்றிலும் பலதடவைபார்த்தவனுக்கும் ஆன்மா இத்தன்மைத்தென விளக்காது. ஆன்மா எப்பொருள் எனவினவில், இதற்கு விடை விவிலியத்திலில்லை. இனி ஆன்மாவே இன்னதென அறியாதார் அவனுக்கு மறுபிறப்புண்டென்றுவது இல்லையென்றுவது எங்ஙனம் கூறத்துணிவார். ஐயோ யாதொரு காரணமின்றிக் கரையேற்றம்பெற விரும்பும் புல்லறிவாளரை இவ்வளவு நட்டாயும் நூலாராய்ச்சிப்பெற்றவன் அறியத்தக்கதாயும் உள்ளவிஷயங்களைப்பற்றி வினவுதல் மிக அனியாயமே! ஆகையால் ஆரியர்களே விட்டுவிடுங்கள்; கிளிப்பிள்ளை போல் அவர்கள் அவர்புத்தகத்தில் படித்தபடி ஏதோ ஒரு மனிதகுமாரன் கதையை